
உ
சிவமயம்




அமரர்

# திரு. வைத்திலிங்கம் வேலாயுதம்

அவர்களின்

# நினைவு மலர்

21.12.2010

உ
சிவமயம்

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அஃது"

மலர்வு
15
•
07
•
1928



உதிர்வு
21
•
11
•
2010


அமரர்

# திருவாளர். வைத்திலிங்கம் வேலாயுதம் அவர்கள்

திதிவெண்பா

விகிர்தி வருட கார்த்திகை திங்கள் ஆறாம் நாள்
திருக்கார்த்திகையுடன் பூரண திதியில் ஞாயிறன்று
நற்குணத்தான் மூளாய் வை. வேலாயுதம் சிவன்
பாதத்(து) ஆனாய் அடைந்தனரன்பாய்.

உ
சிவமயம்



அவன் ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவதொன்று றில்லை
அவனன்றி ஊர்புகு மாறறி யேனே

உ

சிவமயம்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், மூளாயை வதிவிடமாகவும், தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமான

அமரர்.

# திருவாளர். வைத்திலிங்கம் வேலாயுதம் (மாஸ்டர்)

அவர்களின்

சிவபதப் பேறு குறித்த

## நினைவு மலர்

21.12.2010

# சமர்ப்பணம்

எமது அன்புத் தெய்வத்தின்
திருப்பாதங்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்

அன்பான கணவனாய்!
பாசமுள்ள தந்தையாய்!
நேசமுள்ள மாமாவாய்!
தேனுமினிய தாத்தாவாய்!
அறிவு மிகு குருவாய்!
கருணை நிறைந்த சோதரனாய்!
வையகத்தில் எங்கள் வாழ்விற்கும்,
வளர்ச்சிக்கும் ஒளிவிளக்காய் தன்னையே
உருக்கி ஒளியூட்டிய எங்கள் அன்புக்
குடும்ப விளக்கின் இனிய நினைவுகளை
எம் இதயத்தில் சுமந்த வண்ணம்
இம் மலரை அவர் பாதக்கமலங்களில்
அர்ப்பணித்து சமர்ப்பிக்கின்றோம்.

அன்னாரது ஆன்மா சாந்தியடைய மூளாய்
வதிரன்புலோ ஸ்ரீ சித்தி விநாயகரினதும்
முத்துக்குமரசாமியினதும்
பாதார விந்தங்களைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்புடன்
குடும்பத்தினர்.

உ
சிவமயம்



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே.

(சம்பந்தர்)

கூற்றாயின் வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியென்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே (அப்பர்)

பித்தாப் பிறை சூடிபெரு மானேயருளாளா
எத்தான் மறவாதெ நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால்
வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அத்தா வுனக்காளாயினி யல்லே னெலெமே

(சுந்தரர்)

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.
(மாணிக்கவாசகர்)

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்(டு) உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.
(சேந்தனர் சுவாமி)

## திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊருமுலகுங் கழறவுழறி உமை
மண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.
(சேந்தனர் சிவலோக நாயகன்)

## திருப்புராணம்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

(சேக்கிழார்)

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற்குணநேயா
ஒப்பிலா மாமணிக்கிரிவாசா
வித்தகா ஞானசத்தினி பாதா
வெற்றிவேலாயுதப் பெருமானே

(அருணகிரிநாதர்)

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம்சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்

# வாழ்க்கை வரலாறு

## அமரர் திரு. வைத்திலிங்கம் வேலாயுதம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

இந்து மகா சமுத்திரத்தின் முத்தென விளங்கும் அழகிய இலங்கைத்தீவின், செந்தமிழும் சைவ நன்நெறியும் தழைத்தோங்கி விளங்கும் யாழ்ப்பாணத்தில், இயற்கை வனப்பு மிக்க மூளாய் என்னும் கிராமத்தைச் சேர்ந்த மானா முதலியார் வம்ச வழிவந்த வைத்திலிங்கம் தையல் நாயகி தம்பதிகளுக்கு மூத்த புதல்வனாக மலேசியாவில் 15.07.1928 அன்று அமரர் திரு. வேலாயுதம் அவதரித்தார். இவருடன் காலம் சென்றவர்களான கந்தசாமி, நவரத்தினம் என்னும் இரு பாசமிகு தம்பிமார் உடன் பிறப்பாய் அமைந்தனர்.

அன்னாரின் தந்தையார் மலேசியாவில் லிகிதராக பணி புரிந்து வந்தார். இவ்வாறு பணிபுரிந்து வரும் வேளையில் 1934 இல் தந்தை வைத்திலிங்கம் சிவபதம் அடைய இவரின் தாயார் தமது பிள்ளைகளுடன் இலங்கை வந்து முந்திய வதிவிடமான மூளாயில் குடி அமர்ந்தார்.

அன்னார் சிறுவயதில் தந்தையை இழந்தாலும் அவர் உறவினர்களின் பாசம் பெற்று நன்றே வளர்ந்து வந்தார். இவர் ஆரம்பக் கல்வியை அவரின் பேரனார் அமரர் திரு. கந்தையா (சட்டம்பியார்) அவர்களால் நிறுவப்பட்ட மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், ஆங்கிலக் கல்வியை சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியிலும் கற்றார். இவர் பாடசாலைப் பருவத்தில் சிறந்த உதைப்பந்தாட்ட வீரராக திகழ்ந்து, தான் படித்த கல்லூரி அணிக்காக விளையாடி தனது பாடசாலைக்கு பெரும் புகழைப்பெற்றுக் கொடுத்தார்.

அன்னார் சிறு வயதில் தந்தையை இழந்ததாலும், குடும்பத்தில் மூத்த பிள்ளை என்பதாலும் குடும்பப் பொறுப்பை ஏற்று ஆங்கிலத்தில் **SSC (Senior School**

**Certificate)** ஐ 1951ல் சித்தி அடைந்ததும், அன்னார் சிறு வயதில் இருந்து கணிதத்தில் ஆர்வமும் தேச்சியும் உடையவர் என்பதாலும் தனது ஆசிரியர் தொழிலை தான் படித்த கல்லூரியான சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியில் 01.05.1951 இல் ஆரம்பித்தார்.

அன்னார் இவ்வாறு தொழில் புரிந்து வருகையில் கணித பாட விசேட பயிற்சித்தேர்வுப் பரிட்சையில் தெரிவுசெய்யப்பட்டு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இரு வருட கணித பாட விசேட பயிற்றியை 01.01.1960 ஆண்டில் இருந்து 31.12.1961 ஆண்டு வரை பெற்றார்.

விசேட பயிற்சி முடிவடைந்தவுடன் தனது ஆசிரியர் தொழிலை மீண்டும் 01.01.1962 ஆம் ஆண்டு யாழ் வேலனை மகா வித்தியாலயத்தில் கடமைப்பொறுப்பேற்று 31.10.1962 ஆம் ஆண்டு வரையும் சிறப்பாக கடமை ஆற்றி வந்தார். இவ்வாறு கடமை ஆற்றுகையில் 09.07.1962 இல் சிதம்பர உடையார் வழிவந்த அராலி மேற்கைச் சேர்ந்த விசுவலிங்கத்தின் (லிகிதர்) மூத்த மகளான லோகநாயகியை மணம் முடித்தார். இவரின் திருமண வைபவம் மூளாய் இல்லத்தில் இனிதே நடைபெற்றது.

இல்லறம் என்ற நல்லறம் இனிதே இயைபுற அதன் பயனாக கேசவன் **(Quantity Surveyor),** தயா **(B.Sc),** முகுந்தன் **(AAT),** கிரிதரன் **(B.Sc),** வத்சலா **(B.Sc)** பராபரன் **(B.Sc)** ஆகிய பிள்ளைச்செல்வங்களை பெற்றெடுத்து மகிழ்ந்தார்.

அன்னார் யாழ் / வேலனை மகாவித்தியாலயத்தைத் தொடந்து வேறு பல பாடசாலைகளில் ஆசிரியராக இரத்தினபுரி (பலாங்கொட), கிளிநொச்சி ஆகிய

மாவட்டங்களில் கடமை ஆற்றி இறுதியாக கல்லூரி அதிபராக கிளிநொச்சி இந்துக்கல்லூரி, வட்டக்கச்சி மகா வித்தியாலயம், கண்டாவளை மகா வித்தியாலயம், பரந்தன் மகாவித்தியாலயத்திலும் பணிபுரிந்து 14.07.1988 இல் ஓய்வு பெற்றார்.

அமரர் தம் வாழ்வின் கடமையாக தமது பிள்ளைகளுக்கு உரிய காலத்தில் மணவாழ்கையை அமைத்துக் கொடுத்து மருமக்களாக முறையே தனலஷ்மி(**B.com**) இராமச்சந்திரன் (**AAT**), சௌமினி, சுஜித்திரா(**Bcom, CIMA**), திருவண்னன் (**Chartered Accountant**), தேவதர்ஷினி (**Accountant**) ஆகியோரை தேர்ந்தெடுத்தார். அன்னாருக்கு இனிய பேரப்பிள்ளைகளாக நிதர்ஷினி, கௌசிகா, நேத்திரன், விகாஷ், லகஷ்சனா ஆகிய பாசமிகு பேரப்பிள்ளைகள் கிடைக்கப்பெற்று மனமகிழ்வாக வாழ்ந்து வந்தார்.

இவர் நாட்டின் போர் சூழல் காரணமாக குடும்பத்துடன் 1996 இல் இருந்து இறுதி வரை கொழும்பில் வசித்து வந்தார். அவ்வாறு வசித்துவந்த காலத்திலும் தனது ஊர் கோயிலான மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்தி விநாயகரினதும், முத்துக்குமார சாமியினதும் வருடாந்த உற்சவத்திற்கு வழமைபோல வருடாவருடம் தனது துணைவியாருடன் செல்வார். அத்துடன் முறை தவறாது முத்துக்குமார சாமியின் 5ஆவது சப்பறத் திருவிழாவையும் நடாத்தி வந்தார். மேலும் தனது பழைய கல்லூரிகளான சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்திலும், மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தின் கொழும்பு பழைய மாணவர் சங்கத்திலும் இணைந்து அவர்களுடன் பாடசாலைகளின் வளர்ச்சிக்காக இறுதிவரை உழைத்தார்.

பிள்ளைகள் வேறு நாடுகளில் வசித்தாலும் தகப்பனாரை விடுமுறைக்கு வந்து பார்வையிட்டும், தொலைபேசியில் உரையாடியும் நன்றாக கவனித்து

வந்தனர். இவ்வாறு இருக்க, அமரர் 2003ம் ஆண்டு இங்கிலாந்து சென்று தனது மூத்த மகளுடன் சிறிது காலம் வசித்து வந்தார்.

ஆசிரியராக கடமை ஆற்றிய காங்களில் தனது மாணவர்களுக்கு நல்ல போதனையை வழங்கியும், திறம்படக் கல்வியை ஊட்டியும் அவர்களின் வாழ்க்கைக்கு நல்ல வழிகாட்டியாக விளங்கினார். அத்துடன் அக்காலங்களில் அவரின் தாயாரையும் இறுதி வரை வைத்து பராமரித்தார்.

இவரின் சகோதரன் அமரர் திரு. கந்தசாமி பல இடங்களில் ஆசிரியராக கடமையாற்றி இறுதியில் அருநோதயாக் கல்லூரியில் உபஅதிபராக கடமையாற்றி இளைப்பாறினார். கந்தசாமி சத்திய தேவி தம்பதியினருக்கு கீதா, ராஜி என இரு புதல்விகள் உள்ளனர். இவர்கள் இருவரும் நன்றே திருமணம் செய்து எல்லாச் செல்வங்களையும் பெற்று வாழ்வில் எந்தக் குறையுமின்றி தமது தாயாருடன் கனடாவில் வசித்து வருகின்றனர்.

அன்னாரின் இளைய சகோதரன் அமரர் திரு. நவரத்தினம் கணக்காளராக இலங்கை கப்பல் கூட்டுத் தாபனத்தில் பணிபுரிந்து விஞ்ஞானப்பட்டதாரியான அமரர் திருமதி மனோன்மனியை மணம் முடித்து வாழ்ந்து வந்தார்.

அமரரின் இரு சகோதரர்களும் தங்களது மண் உலகக் கடமையை இனிதே முடித்து விட்டு திரு. கந்தசாமி அவர்கள் 30.10.1991 இல் சிவபதம் எய்தினார், இளைய சகோதரன் நவரத்தினம் 1995இல் சிவபதம் எய்தினார். கணவனைத் தொடந்து திருமதி மனோன்மனியும் 1995 இல் அமரத்துவம் எய்தினார்.

அன்னார் இவ்வாறாக நல்ல மகனாக, அண்ணனாக, குடும்பத் தலைவனாக, தந்தையாக, பாசமிகு பேரனாகவும்

இருந்து தமது மண் உலகக் கடமைகள் எல்லாம் முடித்துவிட்டு ஆறுதலாக தனது மனைவியுடன் வசித்து வந்தார். அவ்வாறாக வாழ்ந்து வந்த நாட்களில் சுகயீனம் காரணமாக வெள்ளவத்தை **Royal** வைத்தியசாலையில் 20.11.2010 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு அனுமதிக்கப்பட்டார். அங்கேயும் நன்றாக கதைத்தபடி நல்ல சுய நினைவாக இருந்தார். 21.11.2010 அன்று பூரண பௌர்ணமியும் திருக்கார்த்திகை தீப நன்நாளில் நள்ளிரவு 11.55 மணியளவில் தனது 48 வருட காலமாக கரம்பிடித்து வாழ்ந்த மனைவியை தனது பிள்ளைகளிடம் பொறுப்பளித்துவிட்டு எம்மை எல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்தி, நித்திரையில் எதுவித அசைவும் இல்லாது நிம்மதியாக, சாந்தமாக, அமைதியாக இறுதி மூச்சை மாரடைப்பு என்னும் காரணத்தால் நிறுத்தி எம்மை எல்லாம் பிரிந்து திருக்காத்திகை ஜோதியில் கலந்து விட்டார்.

இறப்பும் பிறப்பும் இயற்கையின் நியதி என்றாலும் எமது குடும்ப விளக்கின் இழப்பை ஈடு செய்ய கடவுளின் ஆசியையும், பலத்தையும் வேண்டி நிற்கையில், அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லோரும் அமைதியாக மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்தி விநாயகரையும் முத்துக்குமார சாமியையும் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

# The Late Mr.Vythilingam Velayutham's Collection of memories

| | | |
|---|---|---|
| Birth | - | 15-07-1928 |
| Birth of Place | - | Malaysia |
| Mother | - | Kandiah Thayalnayaki (Deceased) |
| Father | - | Muthukumaru Vythilingam (Deceased) |
| Brothers | - | Vythilingam Kandasamy (Deceased) |
| | - | Vythilingam Navaratham (Deceased) |
| Carrier | - | Senior School Certificate (1951) at J/Victoria College, Chulipuram. Trained in special maths (1960 - 1961) at J/Pallay Tranning College. He started his carrier in 01.05.1951 as maths teacher in J/Victoria college and Retired as a principal from Kili /Paranthan G.T.M.S in 14-07-1988. |

| **Served Places** | **Period** | | |
|---|---|---|---|
| J/F Victoria College | 01.05.1951 | - | 31-12-1956 |
| J/F Pallay Tranning College | 01.01.1957 | - | 31-01-1957 |
| J/F Punnalaikadduvan | 01.02.1957 | - | 31-08-1958 |
| J/F Victoria College | 01.09.1958 | - | 30-10-1958 |
| J/F Punnalaikadduvan | 01.11.1958 | - | 31-12-1959 |
| J/F Pallay | 01.01.19... | - | 31-12-1961 |
| J/F Velanai Mahavidyalam | 01.01.1962 | - | 31-10-1962 |
| J/F Pandatharuppu Girls School | 01.01.1963 | - | 30-04-1963 |
| J/F Victoriya College | 01.05.1963 | - | 31-12-1967 |
| Ratnapuri Balangoda Tamil M/V | 01.01.1968 | - | 31-05-1971 |
| J/F Karanavai Maha Vidyalam | 01.06.1971 | - | 31-08-1971 |

| | | | |
|---|---|---|---|
| J/F Pannakam Meihandan M/ V | 16.11.1971 | - | 30-04-1976 |
| J/F Victoriya College | 01.05.1976 | - | 14-07-1980 |
| Kili/ Hindu M/V | 15.07.1980 | - | 13-10-1984 |
| Kili/ Vaddakachi M/V | 14.10.1984 | - | 31-08-1986 |
| Kili/ Paranthan | 01.07.1987 | - | 14-07-1988 |

Marriage - He got married with Visuvalingam Loganayaki on 09.07.1962.

Children - Gesavan, Dhayah, Mugunthan, Gritharan Vathsala and Paraparan

In Laws - Mr.M.Ramachandran, Mr.K.Thiruvannan, Mrs.G.Thanaluxmi, Mrs.M.Shawminy, Mrs.G.Sujithara & Mrs.P.Devadarshini.

Grand Children - Nidarshini, Kousiha, Nethiran, Vigas & Lukshnah

Activities - Football, Cricket & Swimming.

Death and Cremation - He passed way on 21.11.2010 at Royal Hospital in Colombo and cremation took place at Mount Lavaniya cemetery in Colombo District on 25th November 2010, at 17.00.

# மனைவியின் மனதிலிருந்து....

மங்கல நாண்பூட்டி மனைவியானேன் உங்களுக்கு
பூவோடும் பொட்டோடும் பூரித்து வாழ்ந்திருந்தேன்
கைப்பிடித்த நாள் முதலாய் கண்கலங்கி நிற்கவில்லை
கதறுகின்றேன் நான் இங்கு கண்துடைக்க வருவீரோ?

இலக்கணத்தில் எழுதியது போல்
இல்லறத்தில் இணைந்தே வாழ்ந்தோம்
எத்தனை தேவைகள் எந்தனுக்குண்டோ
அத்தனையும் அன்புடன் நிறைவேற்றினீர்கள்

எத்தனை துயர் வந்திட்ட போதிலும் என்னுடன்
இணைந்திருந்து துயர்போக்கினீர்கள் இன்று
இப்பிரிவுத்துயரை எனக்குத் தந்து
ஏன் பிரிந்து சென்றீர்கள்

காலத்தின் கணக்கின் படி கண்மறைந்து போனீர்கள்
கூடிழந்த பறவையாய் தவிக்கின்றேன் நான் இங்கு
கோடி ஆறுதல் கூறி பலர் நின்ற போதிலும்
ஆறவில்லை எம்மனம் ஆண்டவனிடம் வேண்டுகின்றேன்
உங்கள் ஆத்மா சாந்தி பெற......

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



# பிள்ளைகளின் நினைவுகளில்

உயிர் தந்து உணர்வூட்டி எமையெல்லாம் உலகத்தில்
உன்னதமெய்தச்செய்த எமதருமை அப்பாவே!!!
கண்ணின் மணி போல எமைக் காத்தீர்கள்
கல்விதனை புகட்டி கடமைகள் புரிந்தீர்கள்

அன்பினால் எமை அணைத்து ஆதரவு தந்தீர்கள்
அச்சமின்றி நாம் வாழ அறிவுரைகள் தந்தீர்கள்
நல்ல உணவு தேடித் தந்து நமக்காக வாழ்ந்திர்கள்
நற்கதைகள் கூறி எம்மை நல்வழிப்படுத்தினீர்கள்

கூடியிருந்த எம் வாழ்வு குலைந்தே போனதுவோ
காலத்தின் கட்டளையால் கடல் கடந்து வந்திட்டோம்
கடல் கடந்து வாழ்ந்திடினும் கலையாத உங்கள் அன்பு
காத்தது எமையெல்லாம்!!!

வருத்தம் என்று நீங்கள் வாடியிருந்ததில்லை அதனால்
வயதுங்களுக்கு வந்ததென்று நாமும் எண்ணவில்லை
எம் கடன்கள் அத்தனையும் அங்கிருந்தே செய்தீர்கள்
எப்பொதும் எம்முடனே இருப்பீர்கள் என்றிருந்தோம்

நித்திய பிறிவியும் நீங்கா உயிரும்
யாருக்கும் உரியதல்ல
பாழையாம் தன்மை செத்தும்
பாலனாம் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும்
என்றோ ஓர் நாள் யாவரும் இறப்பது
உறுதி என்றுணர்ந்து உங்கள் பிரிவின்
துயரினின்றும் மீள முயல்கின்றோம்

உங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

## மருமக்கள் இரங்கல்

மாமா என்றுங்களை மனதார அழைத்திட்டோம்
மறைந்து போனதுவோ உங்கள் திருவுருவம்
மறக்காது எம் மனது என்றும் உங்கள் நினைவுகளை
முடியவில்லை எங்களுக்கு இழப்பினை ஏற்பதற்கு

அன்பும் அரவணைப்பும் உங்களின் பிறப்பிடம்
பண்பும் பாசமும் உங்களின் வதிவிடம்
உபசரிப்பும் உற்சாகமும் உங்களின் பிள்ளைகள்
ஊக்கமும் உழைப்பும் உங்களின் நண்பர்கள்

மண்ணுலகத்தினில் பிறப்பவர் யாவரும்
ஓர் நாள் மறைவதே முடிவென்றெண்ணி
தேற்றுவோம் மனதினை - உங்களின்
ஆத்ம சாந்திக்காய் வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



# Beloved Thaththa

I miss thaththa so much when I was small he used to feed me, He was very active. Thaththa was 82 years old but he didn't look old. I like milk in Sri Lanka It tastes nice so he goes and buys it for me. He watches a lot of T.V. I miss thaththa very very much let him rest in peace. I am very sad.



**Love**
**Your Grand daughter**
**Nidarshini**

# My Dear Thaththa

I miss you very much
I cannot stop thinking about you
When I come to Sri Lanka you receive me and
send me off.
You give me hugs and look after me all the time.
You always call me "Ponkunchu" . Now I can-
not hear the word in my life ever again.
you will always be in my thoughts and mind
My prayers for you to rest in peace and harmony.

**Loving**
**Grand daughter**
**Kousiha**



# பேரப்பிள்ளைகளின் நினைவில்

தாத்தா நீங்கள் எங்கு போய்விட்டீர்கள்...
எமது அன்புக்குரிய அருமைத் தாத்தாவே
பொன்குஞ்சு பொன்குட்டி என அழைத்து
எம்மை அரவணைப்பீரே அருமைத் தாத்தா

உங்கள் சிரித்த முகமும் சாந்தமான பார்வையும்
தன்னகத்தே வைத்த எமது தாத்தாவே
எம்மை விட்டு நெடுதூரம் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எமது நெஞ்சில் என்றும் இருக்கும்
அவை என்றும் எமது வழி காட்டிகளாகும்.

என்றும் அன்பு மறவாத
பாசமிகு பேரப்பிள்ளைகள்



உ

சி. ஜெயானந்தசர்மா
பிள்ளையார் கோவில்
மூளாய்
சுழிபுரம்.

S. JEYANANTHASARMA
PILLAIAR KOVIL
MOOLAI
CHULIPURAM.

# நெறிநின்று வாழ்ந்த நிறைவாளன்

பெறுதற்கரிய பிறப்பெடுத்து அறிதற்கு அரிய நுண்ணறிவினையும் பெற்று, உரியவர்க்கு உரியதான உள்ளார்ந்த செயற்பாடுகளையும் உரியவாறு மேற்கொண்டு வாழ்வாங்கு வாழ்ந்து வந்த குரு வை. வேலாயுதம் அவர்கள் ஆவார்.

நான் அறிந்த நாள் முதலாக குடும்ப பாரியங்களைப் பேணியும் திறமைமிகு கணித ஆசானாகவும் திகழ்ந்து பிள்ளையாரையும் முருகனையும் தவறாது வந்து வழிபட்டு அபிசேக ஆராதனைகள் செய்விப்பதிலும் பிரியமுடையவர். மேலும், முருகப் பெருமானது சப்பதரத் திருவிழாவையும் சிறப்புறச் செய்தார். நெறி நின்று வாழ்நத நிறைவாளன் இறைபதம் எய்திவிட்டார். இவரது ஆத்மா சாந்தி பெற வதிரன்புலோ ஸ்ரீ சித்தி விநாகயகரையும், முருகப் பெருமானையும் பிரார்த்திக்கின்றேன்.

இப்படிக்கு
சி.ஜெயானந்த சர்மா
மூளாய் வதிரன்புலோ
சித்தி விநாயகர் தேவஸ்தானம்.

**நல்லதோர் ஆசான், அருமையான அன்புள்ளம் கொண்ட எங்கள் பெரியண்ணை...**

அமரரான எங்கள் அன்புக்குரிய பெரியண்ணை அவர்கள் தனது எண்பத்தயிரண்டாண்டுகள் மண்ணுலகிலே மனம் நிறைந்த சிறப்பான வாழக்கை வாழ்ந்து இறைவனடி சேர்ந்தார். எங்கள் அருமைப் பெரியண்ணை அனைவருடனும் பழகுவதற்கும், உதவுவதற்கும் இனிய பண்பாளர். அன்புள்ளம் கொண்டவராகவும், இறை நம்பிக்கை கொண்டவராகவும் சிறந்த வழிகாட்டியாகவும் இருந்தார். ஆங்கில மொழியில் திறமைமிக்க ஆசிரியராக சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நீண்ட காலம் பணியாற்றி, பின் யாழ் மாவட்டத்தில் சில பாடசாலைகளில் பணியாற்றிய பின் கிளிநொச்சிக்கு மாற்றலாகி தொடர்ந்தும் பணியாற்றிய பின் பாடசாலை அதிபராக இருந்து இளைப்பாறினார்.

அவர் மாணவமணிகளுக்கு ஆற்றிய சேவையின் பலனாக அவர் பிள்ளைகள் அனைவரும் இன்று நல்ல நிலையை அடைந்துள்ளார்கள்.

இவர் சிறுவயது முதல் விளையாட்டுத் துறையில் மிகவும் ஆர்வம் கொண்டவர். முதுமை காலத்திலும் விளையாட்டு ஆர்வத்தில் தொலைக்காட்சியில் நடைபெறும் போட்டிகளை தவறாது பார்த்து மகிழ்வார்.

அமரர் அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனிடம் மனதார வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இ.கயிலாயநாதன்

இ.கிருஷ்ணராஜா

# அனுதாபச் செய்தி

ஆருயிர் அண்ணராகவும் ஆசிரியராகவும் நண்பனாகவும் ஆரம்ப கல்வியை கற்ற வித்தியாலய பழைய மாணவ சங்க கொழும்புத் தலைவராகவும் பணியாற்றியவர் அமரர் வைத்திலிங்கம் வேலாயுதம்.

எமது குடும்ப உறவினராகவும், நான் யாழ் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கல்வியை கற்கும் போது கணித பாட ஆசிரியராகவும், வகுப்பாசிரியராகவும் இருந்து எம்மை நல்வழிப் படுத்தி மேலோங்கச் செய்த பெருமை அமரர் வைத்திலிங்கம் வேலாயுதம் அண்ணாவையே சாரும்.

அன்னார் ஆசிரியராகவும், அதிபராகவும் சீரும் சிறப்புமாக பணியாற்றியதுடன் குடும்பப் பணியையும் செவ்வனே நோய் நொடியின்றி கவனித்து, இறுதிவரை ஆசிரியப் பணிபுரிந்து கல்லூரி வாழ்க்கையிலிருந்து சிறப்பாக இளைப்பாறினார்.

அமரர் அண்ணாவும் நானும் ஆரம்பக் கல்வியைப் பயின்ற யாழ் மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் கல்வி பயின்ற ஏனைய பழைய மாணவர்களின் ஒத்துழைப்போடு யாழ் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய பழைய மாணவர் சங்கம் கொழும்பு என்ற நாமத்தில் சங்கத்தை கொழும்பில் ஸ்தாபித்து சங்கத் தலைவர் பதவியை ஏற்று தலைமை தாங்கினார். அக்காலப்பகுதியில் அவருடன் சேர்ந்து நானும் இச் சங்கத்தில் செயளாலராக பணிபுரியும் வாய்ப்பு எனக்கு கிடைத்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

பெற்றோரால் மூன்று வருடத்துக்கொரு முறை மூளாய் முத்துக்குமாரசுவாமி ஆலயத்தில் நடாத்திவந்த 5ம் திருவிழாவை தொடர்ந்து சிறப்பாக செய்து கொண்டு நோய் நொடியின்றி

உற்றார், உறவினர், நண்பர்கள் என்ற வேறுபாடில்லாமல் சகலரையும் சமமாக கருதி வாழ்ந்து வரும் நேரத்தில் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் உறவினர்கள் என அனைவரையும் ஆராத்துயரில் திடீர் என ஆழ்த்திவிட்டு தனது 83வது வயதில் திருக்கார்த்திகை விளக்கொளியூடாக இறைவன் பாதத்தை அடைந்து விட்டார் என்பதை நினைக்கும் போது நம்பவே முடியவில்லை.

அன்னாரின் ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்தி விநாயகர், ஸ்ரீ முத்துமுத்துகுமார சுவாமி இருவரும் அருள் பாலிப்பார்களாக.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

மு. சிவபாலன்
வி. முருகேசுபிள்ளை குடும்பம் சார்பாக.



# அனுதாபச் செய்தி

**அன்புமிகு அக்கா மற்றும் குடும்பத்தினர்**

அண்ணரின் சாவுச்செய்தி கேட்டதும் ஏற்பட்ட ஆதங்கம், அன்னாரின் இறுதி யாத்திரையில் பங்குபற்றி, சுமந்து, சுடுகாடுவரை நடந்து, உங்கள் துயரத்தில் பங்குகொள்ள முடியவில்லையென்பதே.

மற்றும்படி, சீரான, சிறப்பான, செழிப்பான, பூரணமான வாழ்கையை முடித்துக்கொண்டு உலகமெல்லாம் தீபம் ஏற்றி வைகுந்த வாசல் காட்ட தனது இறுதிப்பயனத்தை தொடங்கியுள்ளார். எங்கள் எல்லோரது பிராத்தனையும் அவ்வாறே.

எங்களைப்போன்று, எத்தனையோ பேர்களின் திருமணங்களுக்கு பிள்ளையார் சுழி போட்டு வாழ்கைப் பந்தத்தை ஆரம்பித்துவைத்தவர் எங்கள் அண்ணா, இன்று அவரை நாம் இழந்து நிற்கின்றோம்.

உற்றார், உறவு, நண்பர்கள் என்ற எல்லா உறவுகளையும் மனித நேயத்துடன் பேணி, வாழ்க்கையில் நலிந்தவர்களுக்கு கை கொடுத்து உயர்தி விடவேண்டுமென்ற நல்ல உள்ளம் கொண்டவர். எதிர்ப்புக்களையும் மீறி தன் சிறிய தகப்பன் குடும்பத்தின் சிறப்புக்கும் கௌரவத்துக்கும் அரணாக நின்ற, உறுதியும் உயர்வும் எல்லோராலும் செய்யக்கூடியதல்ல. நான் அனுபவத்தில் கண்ட உண்மை.

2009 ஆண்டு பங்குனி மாதம் எங்களை வழியனுப்ப வந்தபோது புஸ்பத்தை கட்டியனைத்து முத்தம் கொடுத்த காட்சிதான் எங்களைப் பொறுத்தமட்டில் காலச்சக்கரத்தின் கடைசிப்பதிவு.

ஏதேதோ சொல்லிவிடுவோம் ஆனால், அக்காவுக்கு ஏற்பட்டிருக்கும் தனிமையும் வெற்றிடமும் ஈடு செய்யதிடமுடியாதது. பிள்ளைகளின் அரவணைப்பும் பேரப்பிள்ளைகளின் மழலையும் தான் ஈடு செய்யமுடியும்.

வாழ்கை அப்படித்தான் என்ற தத்துவத்தை உணர்ந்து, எதிர்காலத்தை அணுகுவதற்கேற்ற அருளையும் பலத்தையும் தரவேண்டுமென்று இறைவனை வேண்டுகின்றோம்.

அன்புள்ள க. நாகராசா புஸ்பம் குடும்பம்

'வளர்க சிவநெறி' 'வாழ்க வையகம்'

'அருள்நெறிச் செல்வர்' 'இலக்கியச் செம்மல்'
வி. செல்வரத்தினம் J. P.
(அகில இலங்கை சமாதான நீதவான், மத்தியஸ்தர் சபையின்
வலிகாமம் மேற்கு சங்கானையின் பிரதம மத்தியஸ்தர்)

'Arulnerichelvar' 'Elakiyasemal'
V. SELVARATNAM J. P.
(Justice of Peace for Whole Island,
Mediator, Valigamam West Chankanai)

அப்புக்காத்து வளவு
அராலி மத்தி, வட்டுக்கோட்டை.
Advocate Valavoo
Araly Centre, Vaddukkoddai.
T. P. No. 0771107249

12. 12. 20.1[illegible]

## எனது கண்முன் நிற்கும் பண்பாளர், உயர்ந்த மனிதர்...

திரு.வேலாயுதம் மாஸ்டர் காலமாகிவிட்டார் என்ற செய்தியை தொலைபேசி மூலம் அறிந்தவுடன், நான் முதலில் நம்பவில்லை. அவர் ஒரு மாதத்திற்கு முன் என்னுடன் சுகதேகியாகவே கதைத்துக்கொண்டிருந்தவர். அவரின் மரணத்தால் நானும் எனது குடும்பத்தாரும் மிகவும் கவலையும், வேதனையும் அடைந்தோம். அவர் எங்கள் குடும்ப நண்பன், அத்துடன் மிக நெருங்கிய உறவினர்.

அமரர் அவர்களின் இறுதி நிகழ்ச்சியில் தவிர்க்க முடியாத காரணத்தால் கலந்து கொள்ள முடியவில்லை. அதனால் வேதனை அடைகிறேன்.

எல்லோருக்கும் இனியவராக வாழ்ந்து வந்த அமரர் அவர்கள் இவ்வளவு விரைவாக எமை விட்டு மறைவார் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை. எல்லாம் அவன் செயலேயன்றி நாம் ஒன்றும் அறியோம். ஆட்டுவிப்பவர் அவன், ஆடுகின்றோம் நாம் என்பது தான் உண்மை.

அமரரின் துணைவியாரும், எனது துணைவியாரும் ஒரே வயது உடையவர்கள். இருவரும் ஒருமித்து படித்தவர்கள், சிநேகிதிகள், நெருங்கிய உறவினர்கள். இதன் காரணத்தாலும் எங்களுக்கு அமரருடன் நெருங்கிய தொடர்புகள் இருந்தன. எவர் எப்பணியைச் செய்தாலும் ஆசிரியர் பணி ஒன்றே அழியாது. இப்பணி ஆண்டவனால்த்தான் கொடுக்கப்பட்டது. அமரர் ஆசிரியராக, அதிபராக இருக்கும் காலத்தில் தனது கடமைகளை மிகவும் சிறந்த முறையில் மிகவும் கண்ணியமாக செய்தார். மாணவர் சமுதாயத்தில் பெரும் மதிப்பைப் பெற்றவர். இவரிடம் கல்வி கற்றவர்கள் பல ஆயிரம் மாணவர்கள்

உலகிலும், மற்றும் எமது நாட்டிலும் பரவி பெரும் பதவிகள் வகித்து கொண்டு சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இது அமரருக்கு பெருமையைக் கொடுத்தது.

அமரர் உண்மையிலேயே ஓர் உயர்ந்த பண்பான மனிதர். அன்பு, அடக்கம், இனிய சொல் பேசும் தன்மை, உற்றார் உறவினர்களுடன் இனிமையாகப் பழகுபவர். நல்ல ஆலோசனைகள் கூறும் பெரும் ஆசான். இவர் என்னவிடயம் என்றாலும் ஒளிவு மறைவின்றி தனது கருத்துக்களை அப்பட்டமாக எடுத்துக் கூறுவார். தனது மனச்சாட்சிக்கு விரோதமாக எப்போதும் செயற்படமாட்டார்.

" **தக்கார் தகவிலார் என்பது அவரவர்**
**எச்சாத்தார் காணப்படும்** "

என்பது வள்ளுவர் வாய்மொழி, அமரர் தனது பிள்ளைகளை அன்பாகவும், பண்பாகவும் வளர்த்து மக்கள் மதிக்கத்தக்க முறையில் ஆளாக்கி உரிய கல்வியும் ஊட்டி நல்ல இடங்களில் திருமணம் செய்து வைத்து, அவர்களின் வளர்ச்சி கண்டு பூரித்தார்.

" **உறங்குவது போலும் சாக்காடு**
**உறங்கி விழிப்பது போலும் பிறப்பு** "

இந்த வாக்கியத்திற்கமைய ஆயிரம் பிறைகண்ட அமரர் அவர்கள் நோயுற்றிராமல், நொந்து மனம் வாடாமல், பாயிற் கிடவாமல் இறைவனடி சேர்ந்ததெண்ணி மனதைத் தேற்றிக் கொள்ளலாம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர்களுக்காகவும், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் எல்லாம் வல்ல எமது குல தெய்வமாகிய திரு வெண்ணா மலையில் வீற்றிருக்கும் சிவபெருமானைப் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அராலி மத்தி,
அப்புக்காத்து வளவு,
வட்டுக்கோட்டை.
12.12.2010.

" அருள்நெறிச் செல்வர் " "இலக்கிய செம்மல்"
"ஞானசித்தர்", "சித்த ஞானி"
வி. செல்வரத்தினம் J.P
அகில இலங்கை சமாதான நீதவான்

சிவஞானம் சிறீதரன் பா.உ.
B.A.,M.Ed.,PGDE,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்.
882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.
தொலைபேசி: 021 3207584
தொலைநகல்: 021 2221595
கைபேசி : 077 6913244

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

SIVGNANAM SHRITHARAN M.P.
B.A.,M.Ed.,PGDE,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi
Tel. : 021 3207584
Fax. : 021 2221595
Mob.: 077 6913244

## எங்கள் அதிபர்........

கிளிநொச்சி மண்ணின் புகழ்பூத்த கல்லூரிகளான கிளி/வட்டக்கச்சி மகாவித்தியாலயம், கிளி/ இந்துக்கல்லூரியிலும் அதிபராக பணிபுரிந்து தன் பெயரை நிலை நிறுத்தியவர் எங்கள் அதிபர் வைத்திலிங்கம் வேலாயுதம் அவர்கள். நான் வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் கா.பொ.த (சா.த) மாணவனாக படித்துக்கொண்டிருந்த 1984 களில் அக்கல்லூரியில் அதிபராக பதவியேற்று எமது கிராமத்தின் வளர்ச்சியிலும், கல்லூரியின் வளர்ச்சியிலும் அதீதமான அக்கறையோடு செயற்பட்டவர். ஆயுதப்போராட்டங்களால் தமிழர்கள் அல்லற்பட்ட காலத்தில் கூட பதவியேற்று தன் பணியை தற்துணிவுடன் ஆற்றியவர். கணித பாடத்தை எந்நேரமும் எந்த வகுப்பிற்கும் கற்பிக்கும் ஆற்றல் படைத்தவர். திடீரென வகுப்பில் புகுந்து கணிதம் கற்பிப்பார். அவருடைய ஆங்கிலப் புலமை தமிழ் மொழித்திறன் என்பன எம்மை எப்போதும் அதிர்ச்சியில் ஆழ்த்தும். "**ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்**" என்று அடிக்கடி கூறும் எங்கள் அதிபர் ஆளுமைமிக்க மாணவர் சமுதாயத்தை உருவாக்கியதில் பெரும் பங்காற்றியவர். அவர் கிளிநொச்சி மண்ணில் அதிபராக இருந்த காலத்தில் அவரால் உருவாக்கப்பட்ட பல மாணவர்கள் இன்று பிரகாசிப்பதைக் காணலாம். தன்னலமற்ற தற்துணிவுமிக்க எங்கள் அதிபருக்கு கண்ணீர் அஞ்சலி வரைவதில் நான் கவலை கொண்டாலும் அவர் எங்கள் மனதில் என்றென்றும் வாழ்வதோடு எங்களோடும் வாழ்ந்து கொண்டேயிருக்கும் அவரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றென்றும் அவரின் மாணவன்
சி.சிறீதரன்
கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்
கிளிநொச்சி.

## வைத்திலிங்கம் வேலாயுதம் உபாத்தியாயார் பற்றிய நினைவு மீட்புகள்

கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் மூளாய் என்ற கிராமம் இலங்கையின் முக்கியமான கிராமங்களில் ஒன்றாக அறியப்படுவதற்கும், அயலில் இருந்த கிராமங்களைச் சேர்ந்தவர்களால் மதிப்புடன் கவரப்படுவதற்கும் ஒரு முக்கியமான காரணமாக அமைந்தது இங்கு நிறுவப்பட்ட சைவப்பிரகாசவித்தியாசாலை எனப் பெயர் பெற்ற கல்விக்கூடத்தினாலாகும். அக்காலத்தில் மலேசியா சென்று தொழில் செய்து, பணமீட்டி வந்த கந்தையாபிள்ளை என்ற பெருந்தகையாளர், தமது கிராமச்சிறார்களும் கல்வியில் மேன்மை அடைய வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் மேற்படி பாடசாலையை நிறுவினார். இப்பாடசாலை நீண்ட காலம் நீடித்து இருக்கும் வகையில் பொழிந்த சுண்ணக்கற்களாலான பெரும் மண்டபத்தைக் கொண்டதாக அமைத்திருந்தமையால் அக்கட்டிடம் இன்றும் அழியாமல் இருப்பது குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் கொண்டதாகும். இக்கட்டிடம் அக்காலக் கட்டிட மரபை ஆராய விளைபவர்களுக்குச் சிறந்த சான்றாக அமையத் தக்கது. அது மட்டுமன்றி கிராமியப் பண்பாட்டில் ஆழமான பற்றும், ஈடுபாடும் கொண்ட தம்பு போன்ற ஆசிரியர்கள் நீண்ட தூரம் கால் நடையாக நடந்து வந்து இப்பாடசாலையில் கல்வி கற்பித்துச் சென்றனர். அக்காலத்தில் வலிகாமம் மேற்குப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்களின் முக்கியமான கூட்டங்கள் யாவும் இப்பாடசாலையிலேயே நடத்தப்பட்டன.

இத்தகைய ஒரு பாடசாலையை நிறுவியது மட்டுமன்றி, அப்பிரதேசத்தின் பல்வேறு முன்னேற்றச் செயற்பாடுகளிலும் ஈடுபட்ட கந்தையாபிள்ளை அவர்களின் பேரனாகப் பிறந்தவர் தான்

திரு.வை.வேலாயுதம் உபாத்தியாயர் அவர்கள். தமது முன்னோரைப் போலவே சிறார்களுக்கு கல்விப்பணி செய்வதில் தூய்மையுடன் ஈடுபட்டார். மிகவும் எளிமையான தோற்றமும், கண்ணியமான செயற்பாடும் யாவரையும் கவரத்தக்கனவாகும். அவரிடம் கல்வி பயிலும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. இது ஒரு மனக்குறையாகவே உள்ளது.

அவரது தனிப்பட்ட வாழ்க்கை முறை யாரையும் கவரக் கூடியதாகும். அவரின் வாழ்கைத்துணையாக அமைந்த திருமதி லோகநாயகி வேலாயுதம் ஆவர்களும் நற்பண்புகளும் இறை வழிபாட்டில் ஈடுபாடும் கொண்ட குடும்பப் பின்னணியைக் கொண்ட குடும்பத்தில் வளர்ந்து வந்தவர். சிறந்த அமைதியான குடும்ப வாழ்வு, மெச்சத்தக்க விழுமியங்களை கடைப்பிடித்து வாழுகின்ற நன்மக்கள் ஆகியவற்றை நெறிப்படுத்தியவராக தனது வாழ்கையை முழுமைப்படுத்தி வாழ்ந்து இறைபதமடைந்த அமரர் வேலாயுதம் அவர்களின் வாழ்வு பூரணத்துவம் கொண்டதாகும்.

அவரது ஆத்மா சாந்தி பெற்றதாக இருக்கும் என்பதில் சந்தேகமிருக்கமாட்டாது.

சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்
வரலாற்றுத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.
11.12.2010.



*V. Anandasangaree*

Attorney-at-Law & President - TULF

Tel: (00 94 11) 255 2372 / 258 1182
Fax: (00 94 11) 258 1182
Mobile:(00 94) 77 789 0171
e-mail: tulfsl@yahoo.com

C- 38, Macancy Rd
Colombo -5
Sri Lanka

## கிளிநொச்சியின் முன்னேற்றத்தில் அமரர் வேலாயுதம் உட்பட ஆசிரியர் சமூகத்திற்கே பெரும் பங்குண்டு

எனது நீண்ட கால நண்பனும் ஆசிரியருமான வைத்திலிங்கம் வேலாயுதம் அவர்கள் அமரத்துவமடைந்த செய்தி சொல்லெண்ணாத் துயரத்தைத் தந்தது. அன்னாரின் இறுதி நாட்களில் அவருடன் தொடர்பற்று போனதுவும் காலத்தின் சதியே என எண்ணி நோகின்றேன்.

நான் கிளிநொச்சி தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக தெரிவான வேளை அத் தொகுதி கல்வித் துறையில் மிகவும் பின்தள்ளப்பட்ட நிலையிலிருந்தது என்பதனை அனைவரும் அறிந்திருந்தனர். ஆசிரியர்களின்றி சில பாடசாலைகள் மூடப்பட்டும், சிலவற்றில் ஆசிரியர்கள் பற்றாக்குறையாகவும் இருந்தன. கிளிநொச்சிக்கென மாற்றம் பெற்று வரும் ஆசிரியர்களில் பலர் தத்தம் செல்வாக்கை உபயோகித்து விரைவில் மாற்றம் பெற்றுச் சென்றதுமே இப்பின்னடைவு நிலைக்க காரணமென அறிந்து, வேறு வழியின்றி கிளிநொச்சியை தனி மாவட்டமாக்க வேண்டுமென நான் பல புள்ளிவிபரங்களுடன் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையை அன்றைய அரசு செவிமடுத்து, எந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாது 1983ம் ஆண்டு அதனை தனி மாவட்டமாக்கியது.இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் விரைவில் பெரும் முன்னேற்றத்தைக் கண்டனர். இம் மாவட்டம் கல்விமான்கள், வைத்தியக் கலாநிதிகள், பொறியியலாளர்கள் என பல்துறை அறிஞர்களைத் தந்து என் முயற்சியை நியாயப்படுத்தி எனக்கு பெருமையை தேடித்தந்தது.

இந்த முன்னேற்ற நிலமைக்கு முன்னோடியாக செயற்பட்ட சில ஆசிரியர்களுக்கே அத்தனை பெருமைகளும் சேரும். அந்நிலையில் முன் நிற்பவர் என் மதிப்பிற்குரிய நண்பன் அமரர் வேலாயுதம்

ஆசிரியராவார். விக்ரோரியாக் கல்லூரி அவரின் ஊர்ப்பாடசாலையாகக் கொள்ளலாம். அங்கே கணித ஆசிரியராக கடமையாற்றி, அவரின் நெருங்கிய உறவினரும் எனது நண்பர்களுமாகிய திருவாளர்கள் கைலாயநாதன், கிருஸ்ணராஜா சகோதரர்களின் பெரு முயற்சியால் கல்வியில் பின்தங்கிய நிலையில் இருந்த பாடசாலைகளில் கடமையாற்ற முன்வந்த பெருமகனார்தான் அமரர் வேலாயுதம் ஆவார். அக்காலத்தில் ஒரு ஆசிரியரை கிளிநொச்சிக்கு கொண்டுவருவதென்றால் அது இலகுவான காரியமன்று. ஆகவே அன்னார் அன்று கிளிநொச்சியில் சேவையாற்ற வந்தமையை பெரும் தியாகமாகவே அம் மக்கள் ஏற்றுக் கொண்டனர்.

கணித ஆசிரியராக கடமையாற்ற வந்த ஆசிரியர் வேலாயுதம் விளையாட்டுத்துறையிலும் ஆர்வம் காட்டி செயற்பட்டார். சிறந்த முறையில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்திலும் பின் வட்டக்கச்சி மகாவித்தியாலயத்திலும் கடமையாற்றி இறுதியாக பரந்தன் இந்துக்கல்லூரியிலும் சேவையாற்றி 8 ஆண்டுகள் கிளிநொச்சிக்கு ஆற்றிய பெரும் மகத்தான் சேவையை முடித்துக்கொண்டு, தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டார்.

அன்னாரின் சேவையை கிளிநொச்சி மக்களும், நானும் என்றென்றும் நன்றியுடன் நினைவு கூர்வோம். அன்னாரின் உற்றார் உறவினர்களுக்கு அனுதாபத்தைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வீ. ஆனந்தசங்கரி
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
கிளிநொச்சி மாவட்டம். 2010.12.15

Mooloi Vathirapulo Siddhivinayagar Thevasthana
Paripalana Sabai

# "வேலவனை வென்ற வேலாயுத மாஸ்டர்"

நடுத்தர உயரம், திடகாத்திரமான உடல்வாகு பரந்த நெற்றி. அதில் தெரிந்தும் தெரியாமலும் தென்படும் திருநீற்றுத்திலகம், கூசிப்பார்கும் கண்கள், முன்பக்கமாக சரிந்து நடககும் நடை தூரக்கண்டவுடன் சுகம் கேட்டு வந்தனம் கூறும் பண்பு இவை அனைத்தும் கொண்ட எல்லோராலும் அன்புடன் "மாஸ்டர்" என்று அழைக்கப்பட்ட வேலவனை வென்ற வேலாயுத மாஸ்டர் மறைவு எமக்கு எல்லாம் துயரைத்தருகின்றது.

சைவமும் தமிழும் செழித்தோங்கும் உன்னதமான பல மனிதப் பண்புகளுக்கு உறைவிடமாகத் திகழ்ந்த மூளாய் என்னும் திவ்விய பூமியில் புகழ் பூத்த கல்விக்கு அடித்தளமிட்ட ஸ்ரீமான் கந்தையா பிள்ளை என்பவரின் பரம்பரையில் உதித்த வேலாயுத மாஸ்டர், ஆசிரியத் தொழிலே திறம்பட மேற்கொண்டதோடு தன் திறமையை சிறுவயதிலிருந்து விளையாட்டு துறையிலும் காட்டி தன் முதுமை பருவத்திலும் கூட ஆர்வமுடையவராக இருந்து அவர் மறையும்வரை தன்னை இளைஞராகவே காட்டிக் கொண்டார். இவரின் கல்வி வழிகாட்டலுக்கும், விளையாட்டுத்துறை செயல்பாடுகளுக்கும் அவர் ஆசானாக கடமையாற்றியது விக்ரோறியாக் கல்லூரியின் பொற்காலமாகும்.

அன்னார் கொழும்பில் வசித்த காலத்தில் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை மேன்மையடைய 1998ம் ஆண்டு கொழும்பு பழைய மாணவர் சங்கத்தை அமைத்து அதன் தலைவராக இருந்து அக்கல்லூரி துரித வளர்ச்சிக்கு வழிசமைத்த "வேலவனை வென்ற வேலாயுத மாஸ்டர்" இன்று நம்மிடையே இல்லை.

யாழ் குடா நாட்டில் வலிகாமம் மேற்குப் பகுதியில் மருதமும், நெய்தலும், நீர்வளமும், நிலவளமும் சீர் செறிந்த "மூளாய்" என்னும் புண்ணிய பூமியில் வானளவு உயர்ந்து நிற்கும் மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகரின் அரிச புத்தராவார்.

அன்னாரின் மறைவால் துயருரும் மனைவி, மக்களுக்கும் எம் ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

சித்தி விநாயகர் கருணை மகத்தானது

| | | |
|---|---|---|
| கி.சிவபாதசுந்தரம் | க.செல்வராசா | மு.முத்துக்குமாரசூரியர் |
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த



# சிவபுராணம்

*திருச்சிற்றம்பலம்*

***

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் கங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப்பிறப்பறுக்கும் மன்னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கி
சிந்தைமகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயவுரைப்பன் யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளக்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யாவிமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்த கன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்

நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்றசோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராஅமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டு உணர்வார் தங்கருத்தின்

நோக் கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமில்லாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப்பணிந்து.

திருச்சிற்றம்பலம்





# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேஎன்னே
ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய்.!

(1)

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போது இப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசுமிடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரோலோர் எம்பாவாய்!

(2)

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் (று) அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடை திறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எந்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கு ஏலோர் எம்பாவாய்!

(3)

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயில்ஏலோர் எம்பாவாய் !

(4)

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடை திறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்(று)
ஓலமிடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசுஏலோர் எம்பாவாய் !

(5)

மானே நீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னும் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய் திறவாய்

ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பா லோர் எம்பாவாய்!

(6)

அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சென்னேம்கேள் வெவ்வேறாய் இன்னந்துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசுஏலோர் எம்பாவாய் !

(7)

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம்கேட்டில்லையோ
வாழி தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடமை யாமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற வொருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய் !

(8)

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் போர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவர் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோம்ஏலோர் எம்பாவாய் !

(9)

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்

போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப்பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசுஏலோர் எம்பாவாய் !

(10)

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையால் குடைந்து குடைந்து உன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமைஏலோர் எம்பாவாய் !

(11)

ஆல்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தன்நற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தனிஇவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனைநீ ராடு ஏலோர் எம்பாவாய்!

(12)

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப்பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்

கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடே லோர் எம்பாவாய்!
(13)

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடுஏலோர் எம்பாவாய்!
(14)

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தாள் பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தான்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடே லோர் எம்பாவாய்!
(15)

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொளிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னைச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழைஏலோர் எம்பாவாய்!
(16)

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி

இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடே லோர் எம்பாவாய்!
(17)

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற் போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப் பூம்புனல்பாய்ந் தாடே லோர் எம்பாவாய்
! (18)

உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்(று)
அங்கப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம் கேள்
எம்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்!
(19)

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடே லோர் எம்பாவாய்!
(20)

குமரகுருபர சுவாமிகள் அருளிய
கட்டளைக் கலித்துறை



# சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைபாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்

தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக்கடலே
சகல கலாவல்லியே

பஞ்சப்பதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்

காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே

சொல்லிற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தத் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே

சொற்கும் பொருட்கு முயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே.

ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி அபிராமியே!

### கௌரி காப்பு
### விநாயகர் துதி.

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற் கா.

### வேண்டுதற் கூறு.

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே.
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே.
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்த்திடுவேன்.
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிப்போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனை பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே.
வகைபாற்றுப் படலமிதை வழி வழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறியைக் காட்டிடுவாய்

காப்பைப் புனைந்துவிடு காலபாயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பாற்கே அருட்காப்பு அருளும்மமா
பிள்ளை அற்றவர்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடன் தாருமம்மா.
கல்வி சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தேவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரை எல்லாம்மிகு வல்லமையே.
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்ளெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம்மிக விட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்

ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சக்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாய் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

திருச்சிற்றம்பலம்

# கோளறு திருப்பதிகம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறுதிங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறுதிங்கள் செவ்வாய் புதன்வியாளன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடொன்றொடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்கள் வைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

உருவாளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையாடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே வணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் தலையதூர்தி செயமாது பூமி
திசைதெய் வமான பலவும்
அருநெறி நல்லநல்ல அவை நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து
மறையோ துமெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனொடு தூதர்

கொடுநோய் களான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

நஞ்கணி கண்டனெந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல ணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெஞ்சின வவுணரோடு முருமிடியு மின்னு
மிகையான புத மவையும்
அஞ்சிடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தார்
மடவாள் தனோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரியுழுவையோடு கொலையானை கேடில்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

செப்பிள முலைநன்மங்கை யொருபா கமாக
விடையேறு செல்வ னமைவார்
ஒப்புள மதியுமப்பு முடிமேல ணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையா னவந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவாள தனோடு முடனாய்
வாண்ம திவன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்

ஏழ்கடல் சூழிலங்கை யரையன்ற னோடும்
இடரா னவந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேலணிந்தென்
உளமே புகுந்த வதனால்
மலர்மிசை யோனுமாலு மறை யோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

கொத்தலர் சூழலியோடு விசையற்கு நல்கு
குணமா யவேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடி மேலணிந்தென்
உளமே புகுந்த வதனால்
புத்ரொ டணமணைவாரி லழிவிக்கு மண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில்கொள் ஆலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம் பொன்னங்கு நிகழ
நான்முக னாதியாய பிரமா புரத்த
மறைஞான ஞான முனிவர்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ண முரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள் வர்ஆணைநமதே.

*கோளறு திருப்பதிகம் முற்றிற்று*

# நவக்ரஹ தோஷம் நீங்க

## இந்த நவக்ரஹ ஸ்தோத்திரம் சொல்லி ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒரு மலர் வீதம் ஒன்பது மலரை இடவும்

**ஞாயறு**

சீலமாய்வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்

**திங்கள்**

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் புரிவாய்
சந்திரா போற்றி சற்குணா போற்றி
சங்கடம் தீர்ப்பாய் சந்திரா போற்றி

**செவ்வாய்**

சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறைவில்லாதருள்வாய் ர்ணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
ஆங்கராஹனே அவதிகள் நீக்கு

**புதன்**

இதமுற வாழ அன்னல்கள் நீக்கு
புதபகவானே பொன்னடு போற்றி
தம் தந்து ஆள்வாய் பண்ணொலியானே
உதவியாய் அருளும் உத்தமா போற்றி

**வியாழன்**

குணமுள்ள வியாழ குருபகவானே
முணமுள்ள வாழ்வு மகிழ்வுடன் அருள்வாய்
பிரகஸ்பதி வியாழ பரகுருநேசா
கிரகதோஷ மன்றிக் கடாட்சித் தருள்வாய்

**வெள்ளி**

சுக்கிர மூர்த்தி சுகமிக ஈவாய்
வக்கிர மின்றி வரமிகத் தருவாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க்கருளே

**சனி**

சங்கடம் தீர்க்கும் சனி பகவானே
மங்களம் பொங்குமணம் வைத்தருள்வாய்
சச்சரவின்றி சனீஸ்வரத் தேவே
இச்சகம் வாழ இன்னருள் தாதா.

**ராகு**

அரவேனும் ராகு ஐயனே போற்றி
கரவாதருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
இராகு கனியே ரெம்மியா போற்றி

**கேது**

கேது தேவே கீர்த்தித் திருவே
யாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வத்பு வழக்குகள் இன்றி
கேது தேவே கேண்மையாய்ரசிக்ஷி

# நன்றி நவிலல்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்டும்"

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டு திருக்கார்த்திகை தீப நன்நாளில்
இறைவனடி சேர்ந்த எமதன்புத் தெய்வம்

## அமரர் உயர்திரு. வைத்திலிங்கம் வேலாயுதம்

(இளைபாறிய கல்லூரி அதிபர்)

அவர்கள் அமரத்துவம் அடைந்தவேளை
சொல்லொண்ணாத்துயரில் நாங்கள்
செயலிழந்திருந்தவேளை ஓடிவந்து உதவி
புரிந்தவர்களக்கும், ஈமக்கிரியைகளில் கலந்து
கொண்டவர்களுக்கும் மேலும் பல வழிகளில் எம்முடன்
உறுதுணையாக நின்றவர்களுக்கும், தூர இடங்களில்
இருந்து தொலைபேசி, தந்தி, கடிதம், மின்னஞ்சல்,
facebook மூலமும் துயரை பகிர்ந்தோருக்கும், மேலும்
எமது அழைப்பை ஏற்று வருகை தந்து அந்தியெட்டி,
ஆத்மசாந்தி பிரார்த்தனையில் பங்குபற்றி சிறப்பித்த
அனைவருக்கும், இந்நூலிற்கான ஆக்கங்களைத்
தந்துதவியவர்களுக்கும், சிறப்புற வடிவமைத்துத் தந்த
லக்கி பிறிண்டேர்ஸ் ஸ்தாபனத்தினருக்கும் எங்களது
இதயம் கனிந்த நன்றியை நவில்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



- நன்றி -

இங்ஙனம்
குடும்பத்தினர்

21.12.2010



# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகின்றது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

\- பகவான் கிருஷ்ணர்.

Lucky Printers , Colombo. Tel: 0094113150873